**தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பராயம்**

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சங்கத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கீட்டு கொள்கை இலக்கம் 3.5 இன் பிரகாரம், பொருட்களை பகிர்ந்தளித்தல் மற்றும் உரித்து மாற்றப்படும் போது பொருட்கள் / சேவையின் விற்பனையின் போது கிடைக்கும் வருமானத்தை இனங்காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வியாபார முகாமைத்துவ சிங்கள மற்றும் தமிழ் டிப்ளோமா தொடர்பில் மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் போது மொடியுல் நிறைவு செய்யப்பட்ட அடிப்படைக்கு பதிலாக பணம் கிடைக்கும் சந்தர்ப்பத்தில்வருமானம் இனங்காணப்பட்டிருந்தமையால் | 2023 ஆம் ஆண்டு முதல் வருமானத்தினை இனங்காணும் போது அட்டுறு அடிப்படையில் வருமானத்தை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 204,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அந்த ஆண்டில், வர்த்தக முகாமைத்துவ சிங்கள டிப்ளோமா பாடநெறிக்காக ஒரு மாணவரிடமிருந்து நிறுவனம் ரூபா 56,000 தொகையைப் பெற்றுள்ளது. இந்த பாடப்பிரிவுக்கு சொந்தமான 12 தொகுதிகளில் ஒன்று மட்டுமே நடப்பு ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது, ஆனால் முழு பாடக் கட்டணமும் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டதால், ஆண்டுக்கான இலாபம் ரூபா 52,000 இனால் அதிகமாகக் காட்டப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டிலிருந்து, வருமானத்தை அங்கீகரிக்கும் போது, அட்டுறு அடிப்படையில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அட்டுறு அடிப்படையில் வருமானம் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2020 நிதியாண்டுக்காக கணக்காய்வுக் கட்டணம் ரூபா 162,200 தொகை அந்த ஆண்டின் போது நிதியேற்பாடு மேற்கொள்ளாது, மீளாய்வாண்டின் செலவினமொன்றாக இனங்காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் இலாபம் அந்த பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுக் கட்டணங்கள் மட்டும் ஒதுக்கப்படவில்லை. 2021 ஆம் ஆண்டு முதல் தணிக்கைக் கட்டணத்தை முறையாக ஒதுக்கீடு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | கணக்காய்வுக் கட்டணம் சரியாகக் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச் சட்டம் | | | |
| | (i) 3(ஈ) உப பிரிவின் பிரகாரம் நூலகம் மற்றும் தகவல் சேவைகளை நிறுவுவதும் பராமரிப்பதும் இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருந்தாலும், 2023 மார்ச் 31 வரை அத்தகைய நூலகம் மற்றும் தகவல் வழங்கும் சேவையை நிறுவனம் செயல்படுத்தவில்லை. | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தினால் 2023 ஆம் ஆண்டு முதல் திறைசேரியிடமிருந்து எதுவித நிதியேற்பாடும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக் கவில்லை. அதனால், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தினால் ஈட்டப்பட்ட வருமானத்தில் வாசிகசாலையொன்றை உருவாக்கும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். இலத்திரனியல் கூற்றுக்கள் உள்ளடக்கப்பட்ட வலைதளத்தினை உருவாக்குதல் 2023 மே மாதத்தினுள் நிறைவு செய்யப்படும். | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) 3(உ) உப பிரிவின் பிரகாரம், ஒத்த நோக்கங்களுடனான தேசிய மற்றும் வெளிநாட்டு அமைப்புகள் சங்கங்கள் மற்றும் சங்கங்களுடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும், ஆனால் அத்தகைய திட்டங்கள் முறையாக செயல்படுத்தப்படவில்லை. | 2023 மார்ச் 29 ஆந் திகதி அமைச்சின் செயலாளரின் தலைமையில் சர்வதேச தொழிலாளர் சங்கத்தின் உள்நாட்டு தொழிலாளர் அமைப்புடன் இடம்பெற்ற கூட்டத்தின் அறிவுரைக்கமைய இந்தியாவின் V V Giri National Labour Institute உடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று எதிர்காலத்தில் | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கைச்சாத்திடப்படும். அதன் பின்னர் கொரியாவின் மற்றும் ஜப்பானின் தொழில் கற்கைகள் தொடர்பான நிறுவனங்களுடனும் ஒத்துழைப்பொன்றினை மேற்கொள்ள சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (iii) 4 (உ) உப பிரிவின் பிரகாரம், நிறுவனத்தின் நோக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஒத்த நோக்கங்களைக் கொண்டுள்ள, இலங்கை அல்லது வெளிநாடுகளில் உள்ள ஏனைய நிறுவனங்களுடன் ஆட்கள் பரிமாற்றம் மற்றும் பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகள் மற்றும் பொதுவாக அவர்களின் பொதுவான நோக்கங்களை முன்னோக்கி கொண்டு செல்லல் தொடர்பான பணிகளுக்காக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அவை அவ்வாறு செய்யப்படவில்லை. | தொடர்புடைய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம், பயிற்சி வாய்ப்புகளைப் பெறுதல், கண்காணிப்பு வருகைகள், ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான ஆதரவு, ஆராய்ச்சி பரிமாற்றம் போன்ற பல பணிகளைச் நிறைவேற்ற முடியும். | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 18,874,140 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகையானது ரூபா 13,109,428 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா 5,764,712 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு செயற்பாட்டு வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆட்சேர்ப்புக்கான உத்தேச முறைக்கமைய பணிப்பாளர் நாயகம் பதவிக்காக நிரந்தர பதவியொன்று காணப்படுகின்றது. அது நிறுவனத்தின் நிர்வாகம் தொடர்பில் ஒட்டுமொத்த பொறுப்புகளுடனான உயர் நிறைவேற்று அங்கத்துவ பதவியொன்றாவதுடன், இந்த பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு நிறுவனம் இதுவரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. பரீட்சைகள் பிரிவின் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் மற்றும் உதவிப் பணிப்பாளர் பதவிக்காக உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளாமையால் உரிய முறையில் கடமைகள் நிறைவேற்றப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு இலங்கை நிர்வாக சேவையின் அதிகாரி ஒருவர் இரண்டாம் நிலை அடிப்படையில் முழு நேரமாக நியமிக்கப்பட்டுள்ளார். இது பகுதியளவு அரச நிறுவனங்களின் தலைவர்கள் நியமிக்கப்படும் வழிகளில் ஒன்றாகும். | நிர்வாக அலுவல்களை முறைப்படி நடாத்திச் செல்லும் வகையில் நியமனங்கள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தை உருவாக்கியமைக்கான நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக 2020 யூலை மாதத்தில் ஆராய்ச்சி வெளியீடுகள் மற்றும் செயற்திட்ட பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையிலும் உரிய முறையில் உத்தியோகத்தர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிராத காரணத்தால் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்துகொள்ளல் சிக்கலானதாகக காணப்பட்டது. | இந்த பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகளை நிறுவனம் மேற்கொண்டுள்ள போதிலும், 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்பை மேற்கொள்ள முடியாத நிலையில், தற்காலிகமாக ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது. | நிறுவனத்தை உருவாக்கியமைக்கான நோக்கங்களை அடைந்துகொள்ளும் வகையில் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |